பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 25 வியாழக்கிழமை 05.05.2022 கதிர் 181

**இனி இது ரகசியம் அல்ல!**

இன்று காலை நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகருக்கான தெரிவு. புதிய அரசியல் செல்நெறிக்கான பாதை திறக்கப்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகின்றது.

இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக ☞2

# வரி உயர்வுகளுடன் விரைவில் புதிய வரவு - செலவுத் திட்டம்



## நிதி, நீதி அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

கொழும்பு, மே 05

2022 ஆம் ஆண்டிற்காக வரவு – செலவுத் திட்டம் இனிப் பொருத்தமானதல்ல. இதனால் விரைவில் புதிய வரவு – செலவு திட்டம் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளதாக நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்று காலை நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ☞10

## ஜனாதிபதியின் செயலகம் முன் நீதி வேண்டி ஊடகர் போராட்டம்!




சர்வதேச ஊடக சுதந்திர தின மான நேற்றுமுன்தினம் (மே 03) கொழும்பில் ஊடகவியலாளர்கள் ☞10

## அலரி மாளிகைக்கு முன்பாக நடந்த 'மைனா கோ கம' கைவிடப்பட்டது!

### நீதிமன்ற உத்தரவினால் நிறுத்தம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வந்த 'மைனா கோ கம' போராட்டம் நீதிமன்றத் தடை உத்தரவையடுத்துகைவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அரசாங்கமும் உடனடியாகப் பதவி விலக வேண்டுமெனக் கோரி பொதுமக்களால் கொழும்பு காலிமுகத்திடலில் ☞10



## எம்.பிமார்களை நோக்கிக் கூச்சலிட்டு துன்புறுத்த முயன்றமையால் கைதாம்!

### பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விளக்கம்

நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கிக் கூச்சலிட்டு அவர்களைத் துன்புறுத்துவதற்கு முயற்சித்தமையாலேயே நாடாளுமன்றத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களை சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிப்பது தொடர்பில் இன்று (நேற்று) நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ☞10

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்க அரசாங்கம் தயார்!

### ஆளும் கட்சி பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுஊடகங்களுக்குக்கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார். ☞10

## போராட்டக்காரர்கள் கைது; அமெரிக்கத் தூதர் கண்டனம்



நாடாளுமன்றச் சுற்றுவட்டத்தில் நேற்று அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்தமைக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கைதுக்கு அஞ்சாமல் அமைதியான முறையில் எதிர்ப்பை வெளியிடும் சுதந்திரம் ஜனநாயகத்தின் அடிப்படை ☞10

## இன்று நள்ளிரவு முதல் ரயில் சேவை பாதிப்பு

நாடு தழுவிய ரீதியில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் முகமாக நாடு தழுவிய 24 மணித்தியால ரயில்வே தொழிற்சங்கப் போராட்டம் இன்று நள்ளிரவு முதல் ஆரம்பமாக உள்ளது என ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இன்று நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பிக்கும் வேலைநிறுத்தம் நாளை வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு முடிவடையவுள்ளது. இந்த வேலை நிறுத்தத்தில் 40க்கும் மேற்பட்ட ரயில்வே தொழிற் சங்கங்களும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களும் ரயில்வே தொழிற்சங்கங்களுடன் ☞10

## கோட்டாபயவும் மஹிந்தவும் உடன் பதவி விலகவேண்டும்

### சபையில் சஜித் வலியுறுத்து

இந்த ஜனாதிபதி அல்லது பிரதமரின் கீழ் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாடு வெளிச்சத்துக்குப் பதிலாக இருளை நோக்கியே செல்கின்றது. எனவே, மக்களின் கோரிக்கைக்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ☞10



## துணைத் தூதர் - துணை வேந்தர் யாழ்.பல்கலையில் சந்தித்தனர்!



யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ஜே. ராகேஷ் நட்ராஜ் நேற்றுப் புதன்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மரியாதை ☞10

## கல்வியங்காட்டில் இருவர் மீது நேற்று வாள்வெட்டுத் தாக்குதல்



நல்லூர் கல்வியங்காடு பகுதியிலுள்ள வீடொன்றுக்கு முன்பாக வைத்து இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் ☞10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் களமிறங்குவார் என்பதுதான் நேற்றுக் காலை வரை இருந்த நிலைமை. ஆனால் நேற்று மதியத்துக்குப் பின்னர் போக்கு மாறிவிட்டது.

சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரா எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் பேசினார். இதுவரை அந்தப் பதவியில் இருந்து வந்த ரஞ்சித் சியாம் பலப்பிட்டியவையே நாங்கள் இந்தத் தெரிவில் எதிரணி வேட்பாளராக நிறுத்த விரும்புகின்றோம், அதற்கு ஆதரவு தாருங்கள் என்று அவர் கோரினார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. போன்றன அதற்கு இணங்கின – ஒரேயொரு நிபந்தனையுடன். ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய, இந்தத் தேர்வுக்கு முன்னர், அரசுப் பக்கத்தில் இருந்து அணி மாறி, எதிர்க்கட்சிகள் பக்கத்தில் வந்து அமர வேண்டும். அப்படி அமர்ந்தால் ஆதரிக்கலாம் என்பது எதிரணியின் நிலைப்பாடு.

அதனை சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொண்டு, அப்படிச் செய்வதற்கு இணங்கியதாக நேற்றிரவு கிடைத் செய்திகள் தெரிவித்தன. இதனையடுத்து, எதிர்க்கட்சி வேட்பாளராகக் களமிறங்கும் ரஞ்சித் சியாம் பலப்பிட்டியவை ஆதரிப்பதற்காக எதிர்க் கட்சிகளின் அனைத்து எம்.பிக்களையும் இன்று காலை நாடாளுமன்றம் கூடும் போது சபையில் இருக்குமாறு சம்பந்தப் பட்ட கட்சிகளின் தலைவர்கள் மூலம் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன என்பதை அறிந்து கொண்டேன்.

சுதந்திரக் கட்சி தனது எம்.பியான ரஞ்சித் சியாம்பலப்பிட்டியவை எதிர்க்கட்சிகளின் சார்பாக வேட்பாளராகக் களத்தில் இறங்குகின்றமையை அறிந்த மொட்டுக் கட்சிகளின் செயலாளர் சாகர காரியவசம், நேற்று மாலை சு.கவின் செயலாளர் தயாசிறி ஜயசேகராவுடன் தொடர்பு கொண்டு அது உண்மையா என்று கேட்டறிந்தார். அந்தத் தகவலை தயாசிறி உறுதிப்படுத்தினார். அப்படியானால் நாங்கள் (அரசுத் தரப்பு) ஒரு வேட்பாளரைக் களமிறக்கலாமா என்று கேட்டாராம் காரியவாசம்.

“நிச்சயமாக. அதைச் செய்யுங்கள்!” – என்று பதிலளித்திருக்கின்றார் தயாசிறி.

அதனைத் தொடர்ந்து அரசுத் தரப்பின் – மொட்டுக் கூட்டணியின் – ஒரு வேட்பாளரைக் களமிறக்குவதற்கான ‘தேடுதல்’ நடவடிக்கை மும்முரமானதாகத் தெரிகின்றது.

நேற்று நடைபெற்ற மொட்டுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இந்தப் பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பான சர்ச்சை பெரிதாகப் பேசப்பட்டது.

இதுவரை பிரதி சபாநாயகராக இருந்த ரஞ்சித் சியாம்பலப்பிட்டியவை மீண்டும் தனது வேட்பாளராக சு.க. இறக்கினால், போட்டியைத் தவிர்த்து அவரை ஆதரிப்பதன் மூலம் மீளப் புரிந்துணர்வை ஏற்படுத்தலாம், மொட்டுக் கட்சி – சு.க. இடையிலான உறவை மேம்படுத்தலாம் என்று போராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ரமேஷ் பத்திரண போன்றவர்கள் கூட்டத்தில் கருத்து முன்வைத்தனர். ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் இந்த யோசனையைக் கடுமையாக எதிர்த்தனர் எனத் தெரிகின்றது.

“சுதந்திரக் கட்சி, இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் கால் வைத்து, மதில் மேல் பூனையாக நிற்கின்றது. அதை முழுவதுமாக அரசுப் பக்கம் நிற்பதாக சமிக்ஞை காட்டி வெளிப்படுத்தச் சொல்லுங்கள். அதற்குப் பின்னர் அவர்களின் வேட்பாளரை ஆதரிப்பது குறித்து நாம் யோசிக்கலாம். எம்மிடம் – எமது அரசிடம் – போதிய பெரும்பான்மையைப் பலம் உண்டு. அத்தகைய நிலையில் இந்தத் தேர்வை நாம் ஏன் இன்னொரு தரப்புக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்? நாமே எமது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, இதில் வெல்ல முடியும். அப்படி இருக்கையில் நாம் ஏன் இன்னொரு தரப்பின் வேட்பாளரை ஆதரிக்க முயல வேண்டும்.?” – என்று ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்படப் பலர் கருத்து தெரிவித்தனர்.

அதனையடுத்து, மொட்டுக் கட்சி தனது வேட்பாளர் ஒருவரை இன்றைய பிரதி சபாநாயகர் தெரிவுக்கு நியமிப்பது குறித்து ஆரவாரமான ஏற்பாடுகளில் குதித்தது என அறியவந்தது.

இப்பத்தி பிரசுரத்துக்குப் போகும் வரை அதற்கு மேல் உறுதியான தகவல் எதனையும் என்னால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொட்டுக் கட்சி எம்.பியான அஜித் ராஜபக்ஷவின் பெயர் முன்னிலையில் ஆராயப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது. இவர் ஆட்சிப் பீடத்தைக் கட்டியாளும் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவரல்லர். ஆனால் ராஜபக்ஷக்களில் மூத்தவரான சமல் ராஜபக்ஷவுக்கு மிகவும் வேண்டப்பட்டவர்.

சியாம்பலப்பிட்டியவுக்கு எதிராக ஆளும் தரப்பு ஒரு வேட்பாளரை நிறுத்தி, அதனடிப்படையில் தேர்தல் – இரகசிய வாக்கெடுப்பு – இன்று நடைபெறுமானால், நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பின் பெரும்பான்மை நிலை என்ன என்பதை ஒரு தடவை உரசிப் பார்த்து விட முடியும்.

அப்படி ஒரு சவாலை – சர்ச்சையை சந்திக்கும் திராணி – தீர்மானம் – உறுதிப்பாடு – ஆளும் மொட்டுக் கட்சிக்கு இருக்குமானால் அது இன்று வேட்பாளரை நிறுத்தும். இல்லையேல், அந்தப் பிரதி சபாநாயகர் பதவி சு.கவுக்கு ஏற்கனவே நாம் ஒதுக்கியது, சு.கவே அதனை எடுக்கட்டும், நாம் அதற்குப் போட்டியாக வர மோட்டோம் என்று கூறி மொட்டுக் கட்சி வெற்றிகரமாக ஜாகா வாங்கி விடும்.

விடிந்தால் – பொழுது புலர்ந்தால் – நிலைமை தெளிவாகி விடும். அதுவரைப் பொறுத்திருப்போமே...

★ ★ ★

அரசு மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் பெரும் அரசியல் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளன.

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்க முடியாது என்றும், அரசுக்கு எதிரான பிரேரணை விடயத்தில், உத்தேச இடைக்கால அரசில் அல்லது சர்வகட்சி அரசில் இணைவதற்குப் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்வந்தால் மட்டுமே அதனை ஆதரிக்க முடியும் என்றும் பதினொரு கட்சிகள் சார்பில் வாசுதேவ நாணயக்கார நேற்றுத் தெரிவித்திருந்தார். இது குறித்த விவரமான செய்தி நேற்றுக் காலைக்கதிரின் மாலை இதழில் வெளியாகி இருந்து.

வாசு தரப்பின் பதினொரு கட்சி அமைப்பில் (சுதந்திரக் கட்சி உட்பட) மொத்தம் நாற்பது எம்.பிக்கள் வரை இருக்கின்றனர்.

வாசுவின் அந்த நிலைப்பாட்டை அவரது பிற சகாக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என நேற்றிரவு விவரமான தகவல்கள் கிடைத்தன.

நிமால் சிறிபால டி சில்வா, தயாசிறி ஜயசேகரா போன்றோர் வாசுதேவ நாணயக்காரவின் அந்த நிலைப்பாட்டை ஏற்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியுடனும் பிற எதிர்க்கட்சிகளுடனும் விரிவாக ஒரு பேச்சு நடத்திய பின்னரே இது குறித்து முடிவு செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

அவர்கள் இருவரும், மற்றும் விஜேயதாஸ ராஜபக்ஷ போன்றோரும் நேற்று இவ்விடயம் குறித்து சுமந்திரனுடன் சட்ட மற்றும் நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் பற்றி ஆலோசனைகள் நடத்தினர் என அறியவந்தது.

அதன் பின்னர், இந்தப் பிரேரணைகளை ஆதரிக்க வேண்டும் என்ற சாரப்பட்ட நிலைப்பாட்டை அவர்கள் எடுத்துள்ளனர் என்றும் கேள்விப்பட்டேன்.

இந்த இரண்டு பிரேரணைகளிலும் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையே முதலில் எடுக்கப்பட வேண்டும் என்ற வாதத்தில் உள்ள நியாயங்களையும் சுமந்திரன் அவர்களுக்கு விளக்கினார் எனக் கேள்விப்பட்டேன்.

இரண்டு பிரேரணைகளும் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டன. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சர்ச்சை இல்லை. அதை எப்படியும் சபாநாயகர் நாடாளுமன்ற விவாதத்துக்கு எடுத்தேயாக வேண்டும்.

ஆனால், ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் சர்ச்சை உண்டு. அதை சபைக்கு விவாதத்துக்கு எடுப்பதற்கு சபாநாயகர் மறுக்கக் கூடும்.

இது விடயத்தில் சபாநாயகருக்கு ஆலோசனை கூறும் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் எடுக்க அனுமதிக்க வேண்டாம் என்று சபாநாயகருக்கு ஆலோசனை கூறக் கூடும் என்று உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் அந்தத் தீர்மானத்துக்கு சட்ட வலிமை ஏதும் கிடையாது, அத்துடன் சில குறிப்பிட்ட நபர்களுக்கு எதிரான விவாதங்கள் சபையில் நடத்தப்பட முடியாது என்று நாடாளுமன்ற நிலையில் கட்டளைகள் கூறுகின்றன. அந்த வரிசையில் ஜனாதிபதிக்கு எதிராகவும் நடத்தப்பட முடியாது என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சபாநாயகருக்கு ஆலோசனை கூறக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

ஆனால் அப்படி ஒரு கருத்து முன்வைக்கப்பட்டால் அதை எதிர்கொள்ளவும் சட்ட வாதங்களுடன் எதிரணி தயாராக இருப்பதாகத் தெரிகின்றது.

அரசமைப்பின் உறுப்புரை 42இன் பிரகாரம் ஜனாதிபதியானவர் நாடாளுமன்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடுடையவராவார். ஆகவே அத்தகையவர் தொடர்பில் தனது நிலைப்பாட்டை, விவாதம் நடத்தி, தீர்மானம் எடுத்து, அவருக்குத் தெரியப்படுத்தும் உரிமையும் கடப்பாடும் நாடாளுமன்றத்துக்கு உள்ளது. அந்த அடிப்படையில் இந்தப் பிரேரணை நிச்சயமாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

10






அறிவு அறக்கட்டளை ஐ.இ

- தமிழோடு அறப்பணி -

ARIVU TRUST UK

ORGANISERS

MR PATHANCHALY NAVENDREN
FOUNDER TRUSTEE

MR ARUMUGAM GNANENDRAN
FOUNDER TRUSTEE

NANTHANTHA UTHAYA SANGEETHA
FOUNDER TRUSTEE

# CAREER GUIDANCE CLINIC

## Join Zoom Meeting

MEETING ID: 518 894 9313 PASSCODE: ARIVU

DAY - 07.05.2022 (SATURDAY) 11AM (UK TIME) 3.30PM (SRI LANKA TIME)



தொடக்க உரை

KAMBAVARITY JEYARAJ

"தனித்துவம்"



விசேட உரை

MR RATNAM SENTHILMARAN SLEAS III

BSc(Jaffna), MSc, Attorney - at - Law

"JHC PRINCIPAL"



ஆசி உரை

NADARAJAH SATCHITHANANTHAN


## PARTICIPANTS



MR SHAN THIYAGARAJAH
BSc (Hons), MSc, CEng, MIStructE
TOPIC - ENGINEERING



MR SEN KANDIAH
ACMA, CGMA, TAMILS FOR LABOUR CHAIR PERSON
TOPIC - POLITICS



DR MAYOORAN SHANMUGANATHAN
BSc, MBBS, MRCP
TOPIC - MEDICINE



SHENTHURAN RAVENDRADAS
LLB, LLM, SOLICITOR
TOPIC - LAW



MRS SRINITHY NANDASEKARAN
LLB, LLM, ATTORNEY AT LAW, RETIRED DISTRICT AND HIGH COURT JUDGE
TOPIC - COVER LAW



SHANMUGANATHAN HARIHARAN
BUSINESSMAN, SRI LANKA
TOPIC - BUSINESS



PRADEEPAN VELAYUTHAM
FCMA, CGMA, ATT
TOPIC - ACCOUNTANCY & TAXATION

CONTACT - 00 44 79 1613 4976 EMAIL - ARIVUTRUSTUK@GMAIL.COM


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தண்டனையே இல்லாத தவறுகள்

நாட்டின் மோசமான பொருளாதார நிலைமை குறித்தும் அதிலிருந்து மீளுவதற்கான சில வழிகள் குறித்தும் நிதி, நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று நாடாளுமன்றத்தில் கோடி காட்டியிருக்கின்றார். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்துத் தாம் நேற்று நாடாளுமன்றில் ஆற்றிய உரையிலேயே அவர் சில விடயங்களை விவரித்திருக்கின்றார்.

நாட்டுக்கான புதிய வரவு – செலவுத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படும் என்றார் அவர்.

முன்னைய நிதி அமைச்சர் என்ற முறையில் பஸில் ராஜபக்ஷ, கடந்த வருட இறுதியில் சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டம் ஒன்றுக்கும் உதவாதது எனக் குறிப்பிட்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஆகையினால், மாற்றாகப் புதிய வரவு – செலவுத் திட்டம் ஒன்று அவசியம் என்றும் வலியுறுத்தி இருந்தார். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவினங்களை நிறுத்தி, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் புதிய வரவு – செலவுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்ற அனுபவ அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து ஏற்கப்பட்டிருக்கின்றது என்பதையே புதிய நிதி அமைச்சரின் உரை உறுதிப்படுத்தியிருக்கின்றது. அது வரவேற்கத் தக்கதே.

நாட்டின் வரிகளைப் பெருமளவில் குறைத்து, அதிக சலுகைகளை வழங்கியமை நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பின்னடைவுக்குள் தள்ளியுள்ளது என்று குறிப்பிட்ட நிதி அமைச்சர், அதனால் புதிதாகச் சமர்ப்பிக்கப்படும் வரவு – செலவுத்திட்டத்தில் வரி விதிப்புகள் அதிகமாக இருக்கும் என்ற சமிக்ஞையையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நிதியமைச்சரின் இந்த வெளிப்படுத்தல் யதார்த்தமானது, நியாயமானது, மறுக்கப்பட முடியாதது. நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கு மக்கள் தங்கள் சலுகைகளைத் தியாகம் செய்து, அரசுடன் சேர்ந்து நிதிப் பாரங்களைச் சுமக்க வேண்டியமை தவிர்க்க முடியாத பொறுப்புதான். 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்பது போல மேலும் புதிய வரிகளை விதிப்பது தவிர்க்க முடியாத கட்டாயம் என்று கூறும் நிதியமைச்சர் அந்த உண்மையை வெளிப்படையாகப் பேசுகின்றமையால் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகக்கூடும்.

ஏற்கனவே, பொருளாதார நெருக்கடியால் துவண்டு போய்க் கிடக்கும் நாட்டின் பாமர மகனை, இந்தப் புதிய வரி விதிப்புகளின் அல்லது வரி உயர்வுகளின் தொடர் சங்கிலி நடவடிக்கைகள் மேலும் முடக்கப் போகின்றன. 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாக அவனின் வாழ்வு மேலும் பெரும் அவலத்துக்குள் மூழ்கப்போகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதும், வெளிநாட்டுக் கடன்களின் மீள்செலுத்துகை தவணை முறையை சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி தள்ளிப்போடும் செயற்பாடும் நேரத்துடன் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை புதிய நிதியமைச்சர் சப்ரி ஒப்புக் கொள்கின்றார்.

இந்த அரசில் இதற்கு முன்னர் நிதி நிர்வாகம் மற்றும் பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பில் இருந்தவர்களின் சீத்துவத்துக்குத் தற்போதைய நிதியமைச்சர் கொடுக்கும் நற்சான்றிதழ்(?) பத்திரம் இது.

இது போன்று நாட்டின் பொருளாதார நிலைமை இத்தகைய மோசமான கட்டத்தை அடைவதற்குக் காரணமாக அமைந்த சில பல தவறுகளை தமது நேற்றைய உரையில் அவர் விவரித்திருக்கின்றார்.

அவை முற்றிலும் உண்மை. ஆனால், இத்தகைய தவறுகள் நேர்வதற்கு இடமளித்து, பொறுப்பற்றுச் செயற்பட்டவர்கள், நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்த தங்களின் நடவடிக்கைகளுக்காக தண்டிக்கப்படவோ, கண்டிக்கப்படவோ மாட்டார்கள் என்பதுதான் இதில் உள்ள பெரும் அவலமாகும்.

# தேசிய அரசை நிறுவுவதோடு 19ஐ உடன் அமுலாக்க வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து




கொழும்பு, மே 05

இலங்கையின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்காக 15 பேர் கொண்ட அனைத்துக் கட்சி அமைச்சரவையையும், அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்கள் அடங்கிய ஆலோசனை சபை ஒன்றையும் நிறுவ வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான யோசனையை நேற்று கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் முன்வைத்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி, 19 ஆவது திருத்தச் சட்டத்தை உடன் அமுலாக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, குறிப்பிட்ட காலத்துக்குள் நீக்கப்பட வேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டாலும், நிறைவேற்றப்பட்டாவிட்டாலும், தேசிய அரசை நிறுவி, குறைந்தபட்ச வேலைத்திட்டத்துடன் செயற்பட வேண்டும் என்ற யோசனைகளைத் தாம் முன்வைத்துள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# வீதியில் மயங்கி விழுந்த 8 வயது சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், மே. 05

யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் சிறுவன் ஒருவன் வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளான்.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த மகிந்தன் நிரோஜன் (வயது 08) எனும் சிறுவனே உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவன் நேற்றுக் காலை வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையில் வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றின் அருகில் வீதியில் மயங்கி விழுந்துள்ளான்.

அதனை அவதானித்தவர்கள் சிறுவனை மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டான் என்று வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

## ஜனாதிபதியாக ஜோன்ஸ்டன், பிரதமராக மஹிந்தானந்த பதவியேற்றாலும் நாட்டின் பிரச்சினை தீரமாட்டாது!

### சரத் பொன்சேகாவின் எதிர்பார்ப்பு

பொதுமக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கோரியுள்ளார்

நாட்டில் இன்று மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் இல்லாமல் போகும் என்று பொதுவான கருத்துக்கள் நிலவுகின்றபோதும் போராட்டங்கள் தொடரும் என்று சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் போது நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில், விகிதாசார தேர்தல் முறை தொடரவேண்டும் என்றும் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டார்.

நாட்டில் இன்று பதவிகளை மாற்றுவதால் பிரச்சினை தீரப்போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஜனாதிபதியாகவும், மஹிந்தானந்த அளுத்கமகே பிரதமராக பதவியேற்பதால் பிரச்சினை தீராது என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

# மூத்த அறிவிப்பாளர் புவனலோஜினி மரணம்



இலங்கையின் மூத்த அறிவிப்பாளர் புவனலோஜினி நடராஜசிவம் காலமானார்.

அவர் இலங்கை வானொலியின் மூத்த அறிவிப்பாளராவார்.

தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த அவர், செவ்வாய்க்கிழமை காலமானார் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அவர் மறைந்த மூத்த அறிவிப்பாளர் நடராஜ சிவத்தின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது.

# விபுலாநந்தா கற்கை நிறுவக மாணவர்கள் விடுதிகளில் இருந்து முற்றாக வெளியேற்றம்

## மட்டக்களப்பு நீதிவானின் உத்தரவை அடுத்து

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் வி.சுரேந்திரன் உள்ளிட்ட அனைத்து மாணவர்களும் விடுதியில் இருந்து வெளிச்செல்லுமாறு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை, நேற்று முன்தினம் பிறப்பித்துக் கட்டளையிட்டது.

பல்கலைகழகத்தில் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் 29ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், விடுதியில் இருந்து மாணவர்கள் வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்தபோதும் மாணவர்கள் விடுதியில் இருந்து வெளியேறாமல் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜ.பி.கெனடி, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினார்.

இதனையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமிந்த நயனசிறி தலைமையில் நீதிமன்றத்தில் மேற்படி தடை உத்தரவு கோரப்பட்டது.

நீதிமன்ற தடை உத்தரவையடுத்து மாணவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

# கண்கள் கட்டப்பட்ட பண்டாரநாயக்கா சிலை

## நனவிடைதோய்தற் குறிப்புகள்

- முருகபூபதி -


கண்கள் மூடப்பட்ட பண்டாரநாயக்கா சிலை

தென்னிலங்கையில் பிரபலமான சிங்கள ஊடகவியலாளர் வசந்த என்பர் தனது தொலைக்காட்சி சனலுக்காக முக்கிய அரசியல்வாதிகளிடம் பத்துக்கேள்விகளை முன்வைத்துவருகிறார்.

அண்மையில் அவர், அத்தனைகல்லை தொகுதியில் கொரகொல்லையில் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவின் பூர்வீக இல்லத்தில் அன்னாரின் இரண்டாவது புதல்வியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேட்டி கண்டார். இவரிடமும் ஊடகவியலாளர் வசந்த பத்துக் கேள்விகளை முன்வைத்தார்.

காலிமுகத்திடலில் நடைபெறும் மக்களின் தன்னெழுச்சி ஆர்ப்பாட்ட போராட்டத்தை பார்க்க நீங்கள் செல்லவில்லையா..? என்ற கேள்வியையும் ஊடகவியலாளர் வசந்த எழுப்பினார்.

அதற்குச் சந்திரிகா, தனக்கு அங்கே செல்வதற்கு விருப்பம் இருந்தாலும், தயக்கமும் இருக்கிறது என்றார்.

அம்மக்கள் தன்னைக் கண்டுவிட்டு, ஏளனமாக, ஹு சத்தம் எழுப்பினால், அவமானமாகிவிடும் என்கிறார்.

அவரது இந்தப் பதிலில் நியாயம் இருக்கிறது.

நாடாளுமன்றிலிருக்கும் 225 பேருடன் ஜனாதிபதியுடன் சேர்த்து மொத்தம் 226 பேருமே வீட்டுக்குப் போகவேண்டும் என்றும் காலிமுகத்திடலில் குரல் ஒலிக்கிறது.

இந்தப் பின்னணியில் சந்திரிகாவின் தந்தையும் இலங்கையில் பிரதமராகவும் இருந்து, பதவிக்காலத்திலேயே 1959 ஆம் ஆண்டு ஒரு பௌத்த பிக்குவால் சுட்டுக்கொல்லப்பட்டவருமான பண்டாரநாயக்காவின் சிலையின் கண்கள் கறுப்புத்துணியினால் மூடப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா சிலையின் மீது ஓர் ஆர்ப்பாட்டக்காரர் ஏறி அச்சிலையின் ஒரு கையில் நின்றுகொண்டு, கண்களை கறுப்புத்துணியினால் கட்டி மூடுகிறார். பண்டாரநாயக்கா உருவாக்கிய ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் சின்னம் கை என்பதும் குறிப்பிடத்தகுந்தது!

இச் செயல் எதனைக் குறிக்கிறது..?

சிலையாக நிற்கும் அய்யாவே, நீர் பிரதமராகவிருந்த காலத்திலும், அதன்பின்னர் உமது மனைவி அந்தப் பதவிக்கு வந்த காலத்திலும் உமது மகன் அநுரா, எம்.பி. ஆகப் பிரவேசித்தபோதும் இருந்த அதே நாடாளுமன்றம்தான் இப்போது நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியின் செயலகமாக மாறியிருக்கிறது. அங்கிருந்து தற்பொழுது இயங்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத்தான் வீட்டுக்கு


கொல்லப்பட்ட கணவருக்கு அஞ்சலி செலுத்தும் மனைவி ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கா

போகவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்கின்றோம். அதற்காகவே இந்தக் காலிமுகத்திடலை 'கோட்டா கோ கம' என்றும் பெயர் மாற்றியுள்ளோம். இந்தக் காட்சிகளை உமது கண்கள் பார்க்க வேண்டாம். என்று சொல்லப்படுகிறதா?

இலங்கையில் தற்போது தோன்றியிருக்கும் பாரியபொருளாதார நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமே, தேசிய இனப்பிரச்சினையை தீர்க்காமல், போரின் மூலம் தீர்க்க முனைந்த ஆட்சியாளர்கள். அதற்காக செலவிட்ட கோடிக்கணக்கான நிதியும், வெளிநாட்டு கடன்களும்தான். அன்று நீர் தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அர்த்தமுடன் நிறைவேற்றியிருந்தால், இன்று இந்த நிலை வந்திருக்காதே! அதனால், நீரும் அன்று போல் இன்றும் கண்ணைக் கட்டிக்கொண்டு இரும் என்று சொல்கிறதா..?

காலிமுகத்திடல் அமைந்துள்ள இச்சிலையின் தோற்றம் பற்றியதே இந்த நனவிடை தோய்தற் குறிப்புகள்.

1974 ஆம் ஆண்டு காலத்தில் சோவியத் சிற்பி லெவ் கேர்பிள் என்பவரால் வடிவமைக்கப்பட்டு, அந்த நாட்டு அரசினால் நல்லெண்ண அடிப்படையில் வழங்கப்பட்ட உயரமான வெண்கலச்சிலையே அது. சோவியத்தின் அதிபராகவிருந்த பிரெஷ்னேவ் காலத்தில் அச்சிலை இலங்கைக்கு வழங்கப்பட்டது. அப்போது ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்தார்.

இதற்கு முன்னர் இவரது பதவிக்காலத்திலேயே 1973 ஆம் ஆண்டளவில் கொழும்பில் சீன அரசினால் நிர்மாணித்து வழங்கப்பட்ட பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபமும் அமைந்தது.

இரண்டு நாடுகளுடனும் ஶ்ரீமா அம்மையார் நல்லுறவைப் பேணி வந்தவர். அதற்குக் கிடைத்த பரிசுகள்தான் அந்த மண்டபமும் காலிமுகத்திடல் சிலையும்.

ஏற்கனவே முன்னைய நாடாளுமன்றமான இன்றைய ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவும் அமரர் பண்டாரநாயக்காவுக்கு ஒரு சிலை அமைந்துள்ளது.

தற்போது கண்கள் மூடிக்கட்டப்பட்ட சிலையை சோவியத் சிற்பி லெவ் கேர்பிள் வடிவமைத்து, விமானம் மூலம் இலங்கை வந்தபோது, கொழும்பில் சோவியத் தூதரக தகவல் பிரிவு (நவஸ்தி) வெளியிட்டு வந்த சோவியத் நாடு மாத இதழில் (இவ்விதழ் சிங்களம் – தமிழ் மொழிகளில் வெளியானது) அந்தச்சிற்பி பற்றிய கட்டுரையும் அவரது படத்துடன் பதிவேற்றப்பட்டது.

சோவியத் நாடு இதழின் ஆசிரியர் குழுவில் எங்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன், லத்தீப், எழுத்தாளர்கள் பெரி. சண்முகநாதன், மு.கனகராஜன், இராஜகுலேந்திரன், ராஜஸ்ரீகாந்தன் ஆகியோர் பணியாற்றினார்கள்.

குறிப்பிட்ட கட்டுரையை ஒப்புநோக்கியமையால், அந்த சிற்பியின் பெயர் இன்னமும் எனது நினைவில் தங்கியிருக்கிறது.

அந்தச்சிலை விமானத்தில் வந்திறங்கியபோது, அதன் கழுத்துப்பகுதியில் பெரிய கயிறு கட்டப்பட்டு இறக்கப்பட்டதனால், அச்சமயம் எடுக்கப்பட்ட படம் ஊடகங்களில் வெளிவராமல் தவிர்க்கப்பட்டது.

பண்டாரநாயக்கா, லண்டனில் படித்துவிட்டு 1926 ஆம் ஆண்டில் தாயகம் திரும்பியவர். இலங்கை போன்ற நாடுகளுக்கு சமஷ்டி ஆட்சிமுறைதான் உகந்தது எனவும் வாதிட்டு வந்தவர். அதற்காக அவர் இலங்கை முற்போக்கு தேசியவாதிகள் என்ற கட்சியைத்தான் முதலில் ஆரம்பித்தார்.

(07ஆம் பக்கம் பார்க்க)




பண்டாரநாயக்காவை கொலைசெய்ய பயன்படுத்திய துப்பாக்கி




பண்டாரநாயக்கா


பண்டாரநாயக்கா சிலை

# யுத்தத்தில் தாயையும் பின்னர் தந்தையையும் இழந்த சிறுமிகள் வீட்டிலிருந்து வெளியேற்றம்!

## அரச அதிகாரிகள் அடாவடி



முல்லைத்தீவில் இறுதி யுத்தத்தின் போது தாயையும், பின்னர் தந்தையையும் இழந்த இரண்டு சிறுமிகள், அவர்கள் வசித்து வந்த வீட்டிலிருந்து கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டுள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட சிறுமிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு செல்வபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இறுதி யுத்தத்தின் போது தாயை இழந்த நிலையில் சிறுமிகள் தந்தை மற்றும் பாட்டியுடன் வசித்து வந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் அவர்களுக்கான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த சிறுமிகளின் தந்தை வேறொரு திருமணம் ஒன்றை செய்து குறித்த வீட்டிலேயே வசித்து வந்த நிலையில் தந்தை நோய்வாய்ப்பட்டு கடந்த ஆண்டு இறுதியில் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் இரண்டு சிறுமிகளும் சிறிய தாயால் தாக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு கிளிநொச்சிவைத்தியசாலையில் சேர்க் கப்பட்டமை தொடர்பில் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு நீதிமன்ற வழக்கொன்று நடைபெற்று வருகின்றது.

இதனைத் தொடர்ந்து குறித்த வீட்டில் தனது பாட்டியுடன் வசித்து வந்த இரண்டு சிறுமிகளையும் கிராம அலுவலகர் வெளியேற்றியுள்ளார் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பிரதேச செயலாளரிடம், பாதிக்கப்பட்ட சிறுமிகளால் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் அவர்களுக்கு தீர்வு எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், வட மாகாண காணி திணைக்களத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து கடந்த வாரம் மாகாண காணித்திணைக்களத்தின் கட்டளைக்கு அமைவாக பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலர் காணி உத்தியோகத்தர் ஆகியோரால் செல்வபுரம் பொது நோக்கு மண்டபத்தில் விசாரணை முன்னெடுக்கப் பட்டிருந்தது. இதன்போது மேற்படி வீட்டை சிறுமிகளுக்கு வழங்க முடியாது என்றும், வீட்டிலிருந்து வெளியேறுமாறும் தெரிவித்துள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுமிகள் தெரிவித்துள்ளனர்.

சிறுமிகளின் சிறிய தாயாருக்கு கிராம அலுவலர் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் சிலர் உடந்தையாக இருந்து கொண்டு கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முகாவில் கிராம அலுவலர் பிரிவில் சுமார் ஐந்தரை லட்சம் ரூபா செலவில் அரச வீட்டுத் திட்டத்தை பெற்றுள்ளமையுடன், இவ்வாறு இரண்டு வீடுகளையும் கையகப் படுத்தும் நோக்கில் இரு சிறுமிகளையும் பிரதேச செயலக அதிகாரிகளின் துணையுடன் வெளியேற்றியுள்ளனர் எனக் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வழக்குத் தொடர தயாராகுகிறார் மஹிந்தவின் புதல்வர் யோஷித்த!

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் அவரது ஊழியர்கள் குழுவின் தலைமை அதிகாரியுமான யோஷித்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க கொழும்பில் தன்னை குறித்து சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதுடன் மக்களைத் தவறாக வழிநடத்தும் செயல் என யோஷித ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதன் மூலம் தனக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயருக்காக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகளுக்கு ஆலோசனை வழங்கினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ள தகவல்களை அருவருப்புடன் கண்டிக்கிறேன் எனவும் யோஷித்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார்.

கொழும்பில் அரசியல்வாதிகள், அவர்களை சார்ந்தவர்கள் மற்றும் அதிகாரிகளின் ஊழல் மோசடிகள் தொடர்பான கோப்புகளை அம்பலப் படுத்திய அநுரகுமார திஸாநாயக்க, யோஷித்த ராஜபக்ஷவுக்கு சொந்தமாக பல இடங்களில் பல கோடி ரூபா பெறுமதியான காணிகள் மற்றும் சொத்துக்கள் இருக்கின்றன எனவும் கூறியிருந்தார். அதற்கான ஆதாரங்களையும் அவர் சமர்ப்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெண்கரம் அமைப்பால் கற்கை நெறிகள் ஆரம்பம்





வெண்கரம் அமைப்பின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் முன்னோக்கிய பாய்ச்சலாக யாழ்ப்பாணம் கொட்டடியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அட்சய திருதியை தினமான செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர் மு. கோமகன் தலைமையில் இந்த ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. கொட்டடி லைடன் சந்தியில் உள்ள கட்டடம் ஒன்றில் மிக எளிமையான முறையில் ஆரம்ப வைபவம் இடம்பெற்றது.

வலிகாமம் கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகரும் வெண்கரம் தலைமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவருமாகிய திருமதி சுகுணா சண்முகேந்திரன் மற்றும் விருந்தினர்கள் இணைந்து இந்தக்கற்கைநெறிக் கூடத்தை திறந்து வைத்தனர்.

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களை கல்வியில் மேல்நிலை அடையச் செய்வதன் மூலம் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுவரும் வெண்கரம் அமைப்பு, இன்று தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இரண்டாம் மொழியை விருத்தி செய்யும் செயற்பாட்டை நோக்கி வளர்ந்துள்ளமையை பலரும் பாராட்டியுள்ளனர்.

மேற்படி கற்கை நெறிகள் ஆரம்ப நிகழ்வில் கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் ஜி.சிவநேசன், யாழ்.ஊடக அமையத்தின் ஸ்தாபகர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆர்.தயாபரன், மேற்படி வித்தியாலய ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி பத்மமலர் சிவகடாட்சம், வித்தியாலய ஆசிரியர் ஜஸ்ரின் அன்ரனி, கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையத் தலைவர் சி.ஜெபநேசன், வெண்கரம் செயற்பாட்டாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பிரான்ஸ் நகரின் திண்மக்கழிவகற்றல் செயற்பாடு; யாழ்.மாநகர முதல்வருக்கு விளக்கம் அறிவிப்பு

பிரான்ஸ் நாட்டில் நகரங்களில் நடைபெறும் திண்மக்கழிவகற்றல் மற்றும் மீள்சுழற்சி செயற்பாடுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பில் யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஆர்ஜேந்தை மாநகரசபை முதல்வரின் ஏற்பாட்டில் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற ஏ.சற்.யு.ஆர். என்னும் தனியார் நிறுவனத்தில் இந்த கழிகவற்றல் மற்றும் மீள்சுழற்சிகள் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸில் உள்ள 4 மாநகரசபைக்குரிய கழிவற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஏ.சற்.யு.ஆர். நிறுவனத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்முறை விளக்கத்துடன் கூடிய கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன், நிறுவன இயக்குநர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஏ.சற்.யு.ஆர். நிறுவனத்தினர் யாழ். மாநகரசபையின் திண்மக்கழிவகற்றலை மேம்படுத்த எவ்வாறான உதவிகளை தங்களால் வழங்க முடியும் என்பதை ஆராய்ந்து அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை விரைந்து செயற்படுத்துவோம் என இதன்போது தெரிவித்துள்ளனர்.



# குடிவரவு, குடியகல்வு திணைக்கள சேவைகள் வழமைக்குத் திரும்பின

கணினி அமைப்பின் பழுதடைந்த நிலை மீட்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இன்றைய சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது. இன்று தமது அலுவலகத்திற்கு வருவதை தவிர்க்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க் கிழமை) அறிவித்தல் விடுத்திருந்தது.

கணனி அமைப்பில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் அறிவித்திருந்தது.

# அரசியல் நெருக்கடி தொடர்பாக இவ்வாரத்துக்குள் இறுதி தீர்வு

## கலாநிதி நாலக கொடஹேவா நம்பிக்கை

அரசியல் நெருக்கடி தொடர்பில் அரசாங்கம் இது வரையில் எந்தவொரு உறுதியான தீர்மானத்தையும் எடுக்கவில்லை. அடுத்து என்ன நடக்கும் என்பதையும் எம்மால் கூற முடியாது.

எதிர்வரும் நாள்களில் இடம்பெறவுள்ள தீர்க்கமான கலந்துரையாடல்கள் சிலவற்றின் பின்னர் இந்த வாரத் திற்குள் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.

மேலும் தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கமொன்று அமைக்கப்படுமாயின், தேசிய சபையின் பெரும் பான்மை விருப்பத்திற்குரியவரே பிரதமராகவும் தெரிவு செய்யப்படுவார்.

தேசியசபை உறுப்பினர்களின் பரிந்துரைக்கமை யவே அதனை தீர்மானிக்க முடியும் என்றும் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது, நாட்டில் நிலவும் அரசியல் நெருக் கடிகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் அரசியல்வாதி களால் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றமை தவிர்க்க முடியாது. ஆனால் இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு எதுவும் அறிவிக்கப்படவில்லை. அவ்வா றானதொரு தீர்மானம் எடுக்கப்படவுமில்லை.

பேச்சுகள் நிறைவடையும் வரை அடுத்து என்ன நடக்கும் என்பதைக் கூற முடியாது. எதிர்வரும் நாள்க ளில் தீர்க்கமான சில பேச்சுகள் இடம்பெறவுள்ளன. அவற்றின் நிறைவிலேயே எதனையும் உறுதியாகக் கூற முடியும்.

எனினும் எதிர்க்கட்சி உள்ளிட்ட நாடாளுமன்றத்தி லுள்ள சகல கட்சிகளும் இணக்கம் தெரிவிக்கும் பட் சத்தில் பிரதமரும் பதவி விலகி , பின்னர் அமைச்சரவை கலைக்கப்பட்டு மீண்டுமொரு அமைச்சரவையை நிய மிக்கத் தயார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகளிடமிருந்து இதற்கு சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை.

எனினும் எம்மிலிருந்து விலகிச் சென்றவர்களுடன் வெற்றிகரமான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. எனவே புதிய அமைச்சரவை நியமிக்கப்படுமா?, அதில் அங்கத்துவம் வகிக்கவுள்ளோர் யார்? என்பது தொடர்பாக இவ்வாரத்துக்குள் தீர்மானிக்கப்படக் கூடும்.

தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாடாளுமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் தேசிய சபையில் கலந்து கொள் ளும்.

இதன்போதே மேற்படி கட்சிகளே பிரதமர் மற்றும் அமைச்சரவை தொடர்பான பரிந்துரைகளையும் முன் வைக்கும். அதற்கமைய பொதுஜன பெரமுனவின் பரிந் துரையைக் கோரினால் , நாம் பிரதமராக மஹிந்த ராஜ பக்ஷவையே பரிந்துரைப்போம் என்று பஸில் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் இது தேசிய சபையின் பெரும் பான்மை விருப்பத்தின் அடிப்படையிலேயே அமையும். - என்றார்.

## ஜே.வி.பியின் குற்றச்சாட்டை முற்றாக மறுக்கும் மைத்திரி!

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் ‘ஊழல் எதிர்ப்பு குரல்’ என்ற அமைப்பு என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தன்னைப் பற்றி முன்வைக்கப்பட்ட தகவல்கள் உண்மைக்கு புறம்பான வையாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் போது கொள் ளையடிக்கப்பட்ட பணத்தில் ஒரு தொகை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது குடும்பத்தாருக்கு பகிர்ந் தளிக்கப்பட்டதாக முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டுக்களை முற் றாக மறுக்கிறேன் என, முன்னாள் ஜனாதிபதியின் பிரத்தியேக செய லாளர் சமீர டி சில்வா வெளி யிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம்பெறவுள்ள விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி தெளிவு படுத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## குருக்கள் மடம் குருத் தூவார் சேவா ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட வெளிநாட்டு பக்தர்கள்





கொழும்பு, மே 05

வெளிநாடுகளின் பக்கதர்கள் குழு ஒன்று செவ் வாய்க்கிழமை மாலை வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த சீக்கியர்களால் நிர்மாணிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருவது குருக்கள்மடம் குருத்தூவார் (குரு நானக்) ஆலயமாகத் திகழ்கின்றது.

இந்நிலையில் இந்தியாவிலிருந்து சென்று தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் பிரபல யோகா பயிற்று விப்பாளரும், குரூ நானக் பக்தருமான சுவாமி அவர் கள் ஜேர்மன் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அவரின் சீடர்களுடன் ஆலயத்திலும், குரு நானக் மதகுரு அவர்கள் காலத்தில் தேன்றிய தேத்தா மரத்தை யும் வழிபாடு செய்தனர்.

500 வருடங்களுக்கு முன்ன சீக்கிய மதகுகு குரு நானக் அவர்கள் மன்னார், அனுராதபுரம், மட்டக் களப்பு, குருக்கள்மடம் ஆகிய பிரதேசங்களூடாக கதிர் காமத்துக்கு கால்நடையாகச் சென்றவேளை அவர் குருக்கள்மடம் கிராமத்தில் தங்கியிருந்து சென்றார் எனவும், அதன் ஞாபகார்த்தமாக குருக்கள்மடத்தில் குறித்த குருத்தூவார் (குரு நானக்) ஆலயம் அமைக் கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வரப்படுவதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

## கண்கள் கட்டப்பட்ட ........

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமஷ்டி கொள்கையை வலியுறுத்திய அவர் அது தொடர்பாக அக்காலப்பகுதியில் வெளியான Ceylon Morning Leader பத்திரிகையில் கட்டுரைகளும் எழுதியவர்.

இதனால் கவரப்பட்ட தமிழ் இளைஞர்கள் அவரை யாழ்ப்பாணத்திற்கும் அழைத்து வரவேற்றனர். அத்தகைய ஒருவருடன் தந்தை செல்வநாயகம் 1957 இல் தமிழ்மக்களுக்கு ஏற்ற ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டார்.

ஆனால், சிங்கள பேரினவாத கடும்போக் காளர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்கு பாதயாத் திரை சென்ற ஜே. ஆர். ஜெயவர்தனாதான் பின் னாளில் 1978 நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி ஆட்சிமுறையையும் இலங்கையில் அறிமுகப்படுத்தி இன்றைய இத்தனை சீரழிவு களுக்கும் காரண கர்த்தாவாகினார்.

தமிழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டிய பண் டாரநாயக்கா, இறுதியில் கடும்போக்காளர்க ளிடம் சிக்கி, சூழ்நிலையின் கைதியாகி 1959 ஆம் ஆண்டு அவரால் வளர்த்துவிடப்பட்ட பௌத்த பிக்கு ஒருவராலேயே சுட்டுக்கொல் லப்பட்டார்.

அவரது பெயரில் சர்வதேச மாநாட்டு மண்ட பம், விமான நிலையம், தலைநகரம் உட்பட பல இடங்களில் சிலைகளும் அமைந்துள்ளன.

அதில் ஒரு பிரம்மாண்டமான வெண்கலச் சிலை தான் காலிமுகத்தில் அமைந்துள்ளது. அதன் கண்கள் தற்போது ஆர்ப்பாட்டக்காரர்களினால் கறுப்புத்துணி யினால் கட்டப்பட்டுள்ளது.



ஸ்ரீமாவோ – பிரஷ்னோவ்



பண்டாரநாயக்கா சிலை

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமின் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -01

**கோட்டா வீட்டுக்குப் போ**
(Gotta go Home)

நாட்டின் அதிகாரத்திலிருந்து ராஜபக்ஷக்கள் வெளியேற வேண்டும் என்று போராட்டங்கள் நடக்கின்றன. அது, கோட்டா மாத்திரம் போகவேண்டும் என்று நடப்பதல்ல. மொத்த ராஜபக்ஷ குழாமுமே




– எதுவுமே மிச்சமின்றி – நாட்டின் நிர்வாகத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்றே முன்னெடுக்கப்படுகின்றது. அது மக்களின் மக்களின் நியாயமான எழுச்சி. தங்களது வயிற்றுப்பசிக்குத் தன்னும் விடிவு தரக்கூடிய மடிப்பை இருந்தாலும், அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காதமையால் கிளர்ந்தெழுந்துள்ளனர் மக்கள்.



நாடு முழுவதும் வங்குறோத்தானதும், அது அடி வயிற்றைச் சுட்டதும் – ராஜபக்ஷக்களைக் கொலைகாரர்களாகக் குற்றஞ்சாட்டி, அவர்கள் வெளியேற வேண்டும் என்று போராடுகிறார்கள்.

ஜனாதிபதியோ மக்கள் தன்னை ஐந்து வருடங்களுக்குத் தெரிவு செய்தார்கள், அந்தக் காலம் முடியும் வரை இருந்துதான் போகவேண்டும் என்றும், உறுதி அளித்தவற்றை நிறைவேற்றுவேன், மகாசங்கம் கேட்டவற்றுக்காகப் பணியாற்றுவேன் என்றும் தெரிவித்து அவர்களது பாதம் பணிந்து வணங்குகிறார்.

அவரது ஆஸ்தான குரு ஞானக்கா குரு பெயர்ச்சிக்கு பின் மக்களோடு பேசுங்கள், அதன்பின் மந்திரிசபை அமையுங்கள் என்று புத்தி கூற, ஜனாதிபதி தான் சில தவறுகளை விட்டுள்ளார் எனவும், அவை திருத்தி நடத்தப்படும், நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும், தனது கரங்களில் எதுவித கறையும் இல்லை, எந்த ஆஸ்திகளும் தன்னால் சூறையாப்படவில்லை என்று மக்களுக்குக் கூறியுள்ளார். புதிய மந்திரி சபையும் அமைத்துள்ளார். ஆனாலும் மக்களின் கோரிக்கை வலுக்கிறது. அவர் போயே ஆக வேண்டும் என்று போராட்டம் அவரை நிர்ப்பந்திக்கிறது.

**மஹிந்தவும் கோஷ்டியும்**

தானோ தனது குடும்பமோ எதனையும் கொள்ளை அடிக்கவில்லை, தன் பெயரில் ஏதாவது பணம் வெளிநாட்டில் இருந்தால் காண்பிக்கட்டும் என்று சவால் விட்டுள்ளார் மஹிந்தர். அதற்கு அனுசரணையாக உகண்டா நாட்டில் இயங்கும் செரனிற்றி (Serenity ) வர்த்தகக் குழாம் ராஜபக்ஷக்களின் பணம் எதுவும் தங்களோடு மூலதனமிடப்படவில்லை என்றும், அவர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது தங்களது 'சிலோன் கபே'க்கு வெறுமனே விஜயம் செய்தார், அவ்வளவே என அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

இவர்களை நம்புவதா? மஹிந்தவை நம்புவதா? உகண்டாவிலும் கென்யாவிலும் இருந்து பிளிறும் யானைகளைப் பார்ப்பதா? எம்மவர் வேலுப்பிள்ளை கணநாதன் பற்றி செரனிற்றி வர்த்தகக் குழாம் தங்களது அறிக்கையில் ஒன்றும் சொல்லவில்லை. எப்படி அவர் ஜெட் விமானத்துக்கு அதிபதியானார்? அங்கு உள்ள யானைகளுக்கு பாகன் ஆகினார்? ஏன் மஹிந்தவுக்குத் திருப்பதி போக ஜெட் விமானம் தந்தார்? அன்றும் என்றும் மஹிந்தவுடன்தான் நிற்பேன் என்று ஏன் அறிவித்தார்? எவ்வாறு அந்த நாடுகளுக்குத் தூதுவரானார் ? – என்பவை எல்லாம் புதிர்கள்.

இப்போது நடக்கும் இந்தப் போராட்டங்கள் வெற்றி பெற்றால்தான் மேலே குறிப்பிட்ட விடயங்களின் நுனிப் புல்லையோ, வேரோட்டங்களையோ நாம் பார்க்க முடியும்.

ஆனால் மஹிந்தரோ தான் போகின்றவராக இல்லை. பெரும்பான்மை இருந்து நீக்கினால் நீக்குங்கள் என்று பிடிவாதமாக நிற்கிறார். தங்களை நீக்குவதற்கு வேறு வழிகளைச் சிந்திக்க வேண்டாம் என்பதை நாசூக்காக அவர் கோடி காட்டுகின்றார். எந்தப் போராட்டங்களும் வழிமுறைகளும் வன்முறைகள் அற்றன வாகவும் சட்டங்களுக்கு அமைந்தனவாகவும் இருக்கவேண்டுமென்று என்றும், அப்படி இல்லாவிட்டால் தாங்கள் விடுதலைப் புலிகளையே முள்ளிவாய்க்கால் வரைச் சந்தித்தவர்கள், இந்த போராட்டங்கள் பெரிதல்ல, இளைஞர்கள் தேவையற்று இராணுவத்துடன் முரண்பட்டு அழிவுகளைத் தேடக் கூடாது என்று சொல்கிறார். அதன் அர்த்தங்கள் மக்களுக்குப் புரிந்திருக்கும்.

அதன் பிறகு, ரம்புக்கனையின் சம்பவங்கள் நடந்தன.

தற்போது குடும்பம், நாட்டின் ஆட்சி அதிகாரங்களை எப்படித் தவறாது தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அல்லது மீளப்பெறுவது, சந்ததிகள் எப்படி ஆள்வது என்று அவர்களுக்குள்ளேயே சர்ச்சைகள்.

பிரதமர் பதவியை விட்டு போக வேண்டும் என்று ஜனாதிபதி வியூகங்கள் வகுக்கிறார். அதற்குள் நாமலும் பஸிலும் தங்களது எதிர்கால நிலைப்புக்குக் கால்கோளாக மஹிந்தவை நம்பி இருக்கின்றார்கள்.

**வெளியேறத் தயக்கம் ஏன்?**

பேரினவாதத்தில் ஊறிய ராஜபக்ஷ போன்ற தலைவர்கள் அதன் நம்பிக்கையில், தங்கள் தேசம் தங்களுடையது, அதை ஆளும் உரிமை தங்களுக்கு உண்டு என்ற எண்ணச் செருக்கை வளர்த்துக் கொள்பவர்கள்.

தங்களிடம் இருந்து தங்களது சந்ததிக்கு அது போக வேண்டும், அதுவும் தங்களது உரிமை என எண்ணுபவர்கள. இது அவர்களுக்கு மாத்திரமான எண்ணமல்ல, டி.எஸ். சேனநாயக்கா, பண்டாரநாயக்கா தொடக்கம் பேரினவாதத்துக்குத் தூபம் போட்டு வளர்த்த எல்லோரும் கை பிடித்து வந்ததுதான். ஆனால் ராஜபக்ஷக்களிடம் ஒரு வேறுபாடு இருந்தது. பேரினவாதத்தை வெகு நேர்த்தியாக அமல்படுத்தினார்கள். அதனைக் குடும்பமாக, குட்டி ராஜாக்கள் தர்பார்கள் வைத்து, சர்வாதிகார தொனியைப் பரப்பினர். இனவாதத்தில் நாட்டை முற்று முழுதாகச் சிங்கள – பௌத்தமாக்க வேண்டுமானால் மேலும் நிறைவேற்று அதிகாரங்கள் வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டா கேட்டதும், 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த துணை போனார். அதிலும் பஸில் ராஜபக்ஷ இரட்டை பிரஜாவுரிமை கொண்டவராக இருந்தும் நிதி மந்திரியானார்.

ஆக, பேரினவாதப் பகையை வளர்த்துக் கொண்டு விட்டால் அதற்குப் பின்னால் சிங்கள பெரும்பான்மை வந்துவிடும், அதற்கு இப்பொழுதுள்ள பட்டினியால் எழுந்த போராட்டங்கள் சரிபடுத்தி விட்டால் காணும், மக்கள் கொதியடங்கி விடும், மகாசங்கம் அதற்குத் துணை நிற்கும் என்று கணக்கிடுகிறார்கள்.

பேரினவாதத்திற்கு துணை நின்ற சிலரிடமிருந்து சிறுசிறு சலசலப்புகள் இருந்தாலும் அவர்களது எதிர்ப்புகளையும் பாராது சர்வதேச நாணய நிதியத்திற்கு விண்ணப்பங்கள் தருகிறார்கள். சீனாவிடமிருந்தும் இந்தியாவிடமிருந்து கடனும் மற்றவர்களிடம் நன்கொடைகளும் பெறுகிறார்கள். இவை எல்லாமே அதிருப்தியால் கிளர்ந்திருக்கும் மக்களைச் சரிப்படுத்தவே. ஆனால் இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளது. அதனை மிக விரைவாகச் சீர்படுத்த முடியாது, காலம் வேண்டும் என்பது நிபுணர்களின் கருத்து.

கோட்டாபய ஜனாதிபதியாகி இரண்டு வருடங்களுக்கு உள்ளேயே நாடு திவால் ஆனதற்கு ராஜபக்ஷக்கள் பதவியில் இருந்தபோது தங்கள் அரசை யாரும் தட் டிக்கேட்க முடியாது எனத் தன்னிச்சையாக எடுத்த முடிவுகளும், அவற்றிலிருந்து பெற்ற கணக்கில்லாத ஆதாயங்களுமே காரணம். மஹிந்த சீனாவிடம் பெற்ற கடனில் அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் என்று பல நிர்மாணித்தார். எமிரேட்ஸ் விமான நிறுவனத்தோடு ஒன்றிணைந்து ஸ்ரீலங்கா விமான நிறுவனம் நட்டம் ஏதுமின்றி இயங்கிய போது, தமது தனிப்பட்ட பரிவாரத்தை ஏற்றிச் செல்வதற்காக ஏற்கனவே பதிவு செய்திருந்த பிரயாணிகளை இறக்கவில்லை என்ற கடுப்பில் அந்த நிறுவனத்தையே சுவீகரித்து, தனது உறவினர்களிடம் கையளித்து நட்டமாக்கியது, மிஹின் லங்காவை உருவாக்கியது, தாமரைக் கோபுரத்தால் வரும் வட்டிகளும் நட்டங்களும், பஸிலின் திவிநெகும நிதிக் கணக்குகள், கோட்டாபயவின் அவன்கார்ட் ஆயுதப் பரிமாற்றம் எல்லாமே ஊழல் நிறைந்தனவாகவே இருந்தன. இவை எல்லாமே தமிழ் மக்களுக்கு எதிரான போரின் போது கேட்க முடியாதவையாக, பேரினவாதத்தின் வெற்றியில் நியாயப் படுத்தப்பட்டன.

(தொடரும்)



# நாடளாவிய ரீதியிலான ஹர்த்தால் இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதரவு

நாளை மே 06 ஹர்த்தால் தினத்தன்று அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களும் சுகவீன விடுமுறையை அறிவித்து பாடசாலைகளை நடத்தாது தம் எதிர்ப்பை வெளிப்படுத்தி அரச எதிர்ப்பு செயற்பாடுகளை உயர்ந்த பட்சம் முன்னெடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திபொன்றிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எமது நாட்டின் பொருளாதாரத்தையும் சீரழித்து, நாட்டின் எதிர்காலத்தைப் பலிகொடுத்து, நாளைய சந்ததியினரையும் அழிவின் விளிம்பிற்கே கொண்டுவந்துள்ள ராஜபக்ஷ ஆட்சி உள்ளடங்களாக மக்களை வதைக்கும் அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டுமென அனைத்து அரச ஊழியர்கள் உட்பட, தனியார் மற்றும் அரசு ஆதிக்கம் உடைய நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஹர்த்தால் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர்.

அதிகூடிய அரச ஊழியர்களாக உள்ள ஆசிரியர்கள் கடந்த 28ஆம் திகதி போராட்டத்துக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்.

அதேபோன்று மே 06 ஹர்த்தால் தினத்தன்று அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களும் சுகவீன விடுமுறையை அறிவித்து பாடசாலைகளை நடத்தாது தம் எதிர்ப்பை வெளிப்படுத்தி அரச எதிர்ப்பு செயற்பாடுகளை உயர்ந்தபட்சம் முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

அத்துடன் தத்தமது பிரதேசங்களில் இடம்பெறும் போராட்டங்களில் அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் தவறாது கலந்துகொண்டு எமது பலத்தை வெளிப்படுத்துவதோடு அரச எதிர்ப்பு பதாதைகளையும் காட்சிப்படுத்தி பொது உடைமைகள், தனியார் உடைமைகள் எதனையும் பாதிக்காத வகையில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து எமது பலத்தை வெளிப்படுத்த வேண்டியதும் அவசியமாகும்.

மேலும் ஊழல் மலிந்த அரசாங்கம் மக்கள் போராட்டத்தை அடக்குவதற்காகப் பல்வேறு சதித் திட்டங்களை கட்டவிழ்த்து விடுவதோடு அரசாங்கத்தால் பயன்படுத்தியுள்ள ஆள்கள் உங்கள் போராட்டத்தின் மத்தியில் வந்து பல இடையூறுகளை விளைவிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கலாம்.

அதனால் அவ்வாறான வன்முறை முயற்சிகளுக்கு இரையாகாது மக்கள் போராட்டத்தைப் பாதுகாப்பான முறையில் முன்னெடுத்து, அரசாங்கத்தை விரட்டியடிக்கும் இந்தப் போராட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும்.

ஊழல் அற்ற மக்கள் நேயமுள்ள ஆட்சியை அமைக்கும் நோக்கிலான இந்த ஹர்த்தால் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் தலைமையில் முன்னெடுக்கப்படுவதோடு இந்தப் பாரிய போராட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ளவுள்ளன எனவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சி விவசாயிகளிடமிருந்து பெருந்தொகைப் பணம் அறவீடு

### விவசாயிகள் விசனம்

கிளிநொச்சி பரந்தன் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கோரக்கன் கட்டுப் பகுதியில் கமக்கார அமைப்பால் சட்ட விரோதமான முறையில் விவசாயிகளிடம் இருந்து பணம் அறவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பரந்தன் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கோரக்கன் கட்டுப் பகுதியில் கமக்கார அமைப்பால் எந்த வித பயிர் செய்கைக் கூட்டங்களும் நடத்தப்படாது, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் எந்த வித அனுமதிகளுமின்றி வாய்க்கால் அமைப்பதற்கென ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்தும் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் அறவிடப்பட்டிருப்பதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தெடர்பில் பரந்தன் கமநல சேவைநிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு வினவியபோது –

கோரக்கன் கட்டுப்பகுதியில் இவ்வாண்டுக்கான சிறுபோக செய்கை தொடர்பான கலந்துரையாடல்கள் எதுவும் நடத்தப்படவில்லை.

எந்த தீர்மானங்களுமின்றி பற்றுச் சீட்டுகள் இல்லாது விவசாயிகளிடமிருந்து பணம் அறவிடபட்டிருந்தால் அது ஒரு சட்டவிரோதமான செயற்பாடாகும்.

இது தொடர்பாக விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்கும் இடத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு தாங்கள் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தப் பிரதேசத்தில் சிறுபோக செய்கை மேற்கொள்வதற்கான எந்தத் தகவல்களும் எங்களுக்கு உத்தியோக பூர்வமாகக் கிடைக்கவில்லை.

அவ்வாறு கிடைக்கும் போது தான் மானிய கொடுப்பனவுகள், பயிர் காப்புறுதிகள், ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பில் விவசாயிகளுடன் பிரதேச மட்ட கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானங்களை எடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

## நெருக்கடி நிலையிலிருந்து இலங்கையால் மீள முடியுமா?

### இன்று யாழில் கருத்தரங்கு

தற்போதைய பொருளாதார நெருக்கடி பற்றி கல்வியலாளர் பொருளியல் நிபுணர்கள் கருத்துக்களுக்காக மக்கள் காத்திருக்கிறார்கள். இந்தச்சூழலில் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீளமுடியுமா? என்ற தலைப்பில் பொருளியல்துறை நிபுணர், ஓய்வு நிலைப் பேராசிரியர் வி.பி.சிவநாதன் அவர்கள் இன்று கருத்துரை வழங்கவுள்ளார்.

தற்போதைய நெருக்கடிநிலை சாதாரணமக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்திருக்கின்ற அதே வேளை கையறு நிலைக்கு இட்டுச்சென்றிருக்கின்றது. என்ற நடக்கிறது, எதிர்காலத்தில் என்ன நடக்கவிருக்கின்றது என்ற குழப்பமான சூழலில் – விரக்தி நிலையில் – மக்கள் காணப்படுகின்றார்கள். இந்தச் சூழலில் மக்களுக்குப் புரிந்துகொள்ளக்கூடியதாக தகவல்களை பகிர்ந்து கொள்ள வேண்டியதும் மக்களுக்கு அறிவூட்ட வேண்டியதும் காலக்கடமையாகிறது. இந்தச் சூழலில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் சமூக விஞ்ஞானப்பிரிவும் இணைந்து தற்போதைய நிலைமை தொடர்பான அறிவூட்டல் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளனர்.

இதன் முதலாவது கருத்துப்பகிர்வுக் களம் இன்று வியாழக்கிழமை மாலை 3.00மணிக்கு கோவில்வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் தே.தேவானந் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆர்வலர்களை பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்கிறார்கள் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள்.

## அலி சப்ரி, கிரிக்கட்டில் நைட்வோட்ச்மேன் அல்லர் வோட்டர்ஸ் அன்ட் கேட்டின் நைட்வோட்ச்மேன்!

### ரணில் விக்கிரமசிங்க நினைவுபடுத்திக் கருத்து

கஷ்டமான பணியை முன்னெடுத்துள்ள நிதியமைச்சர் அலி சப்ரி, தம்மை 'நைட் வோட்ச்மேன்' என கூறியமை தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

'நைட் வோட்ச்மேன்' என்பது கிரிக்கெட்டில் உள்ள நிலை என்பதை விட நிதியமைச்சர் வோட்டர்ஸ் அன்ட் கேட்டின் நைட் வோட்ச் மேன் என்பதை ரணில் நினைவுப் படுத்தினார்.

நைட் வோட்ச்மேன் ஜனநாயக கட்சியின் தலைமையகம் உடைக்கப்பட்டதை தெரியப்படுத்திமை காரணமாகவே உப ஜனாதிபதியும், ஜனாதிபதியும் பதவி விலகினர்.

எனவே அலி சப்ரி அதனையா செய்யப்போகிறார்? என்று ரணில் கேள்வி எழுப்பினார்.

இந்தநிலையில் நிவாரண உதவிகள் அனைத்தும் தமது ஆட்சியின் போது அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டன என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய வரி குறைப்பிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் காரணம் அல்லர், அதற்கு தனியார் துறையினரே காரணம் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தநிலையில் அதிகாரிகளின் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருக்காமல், முழுப் பொறுப்புகளையும் நாடாளுமன்றுக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தாம் முன்வைத்த யோசனைகளுக்கு உரிய கவனம் செலுத்தப்படாமையால், கோட்டாபயவிற்கு பதிலாக தாமே வீட்டுக்கு செல்ல வேண்டியேற்பட்டதாக ரணில் குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டின் அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கைகள் எதிர்கட்சியால் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் இரண்டு கிழமைகளுக்குள் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தநிலையில் ஒன்றுபட்டு செயற்படக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

## இளைஞரிடம் கஞ்சாவுடன் சிக்கியவர் தப்பியோட்டம்!

### பொன்னாலையில் நேற்று மாலை சம்பவம்

பொன்னாலை ஊடாக காரைநகருக்குக் கஞ்சா கொண்டு சென்றவரை மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றபோது அந்த நபர் கஞ்சாவையும் கைத்தொலைபேசியையும் கைவிட்டுத் தப்பிச் சென்றார்.

இச்சம்பவம் நேற்றுப் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்த நபர் கஞ்சா கொண்டு செல்கின்றார் எனப் பொன்னாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு கிடைத்த தகவலை அடுத்து அவரை வழிமறித்த இளைஞர் விசாரணை நடத்தினார். இதன் போது அவரிடம் கஞ்சா இருந்தமை கண்டறியப்பட்டது.

அவரை வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக கொண்டு சென்றபோது திடீரென்று அவர் காரைநகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார்.

இது தொடர்பாக பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் ந.பொன்ராசாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவித்தார். சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரிடம் கஞ்சாவும் கைத்தொலைபேசியும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



கைத்தொலைபேசியை வைத்து அந்த நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பொன்னாலை கரையோர வீதியூடாக கஞ்சா பரிமாற்றம் இடம் பெறுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளமையால் சந்தேக நபர்களை மடக்கிப் பிடிப்பதற்கு எமது பிரதேச இளைஞர்கள் தொடர்ந்தும் விழிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்தது – ஜனாதிபதி உட்பட சில பதவி நிலை உறுப்பினர்களுக்கு எதிராகக் கணிசமான தன்மை கொண்ட ஒரு பிரேரணை இல்லாதவிடத்து, அவர்களது செயற்பாடு தொடர்பான விடயங்களை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு உட்படுத்தக் கூடாது என்பதுதான் நாடாளுமன்ற நிலையிற் கட்டளை யாகும். ஆனால் இங்கு கணிசமான (substantial) தன்மை கொண்ட ஒரு பிரேரணையாகத்தான் நம்பிக்கையில்லாப்பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பிரேரணையை மட்டும்தான் விவாதிக்க முடியும் என்ற அடிப்படையிலேயே அந்த நிலை யியல் கட்டளை வகுக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சிகள் தமது வாதத்தை முன் வைக்கலாம் என்று தெரிகின்றது.

இது விடயத்தில், எதிரணி சட்ட வல்லுநர்கள் மற்றும் நாடாளுமன்றக் செயலாளர் நாயகம் ஆகிய இரு தரப்புகளுக்கு இடையே சபாநாயகர் சிண்டையைப் பிய்த்துக் கொண்டு அல்லாடப் போகின்றார் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

இம்மாதம் மூன்றாம் வாரத்தில் நாடாளுமன்றம் கூடும் போது இது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக உருவெடுக்கக் கூடும்.

– மின்னல் –

---

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்று மொழிகளிலும் தாக்கல் செய்யப்பட வேண்டும். அதனை சபாநாயகர் ஏற்றுக்கொண்டால் ஐந்து வேலை நாள்கள் முடியும் வரை விவாதம் நடத்தக் கூடாது. அதற்குள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதனைப் படிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

---

## போராட்டக்காரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்சம். அனைத்துத் தரப்பினரையும் கட்டுப்பாடாக இருக்குமாறு அமெரிக்கா வலியுறுத்துகின்றது.

மேலும் அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் உரிமைகளுக்காக அமெரிக்கா தனது ஆதரவை வழங்கும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தனது ருவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## எம்.பிமார்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துரையாடப்பட்டது. கட்சித் தலைவர்கள் மற்றும் சபாநாயகர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் –

நாடாளுமன்றத்துக்கு அருகில் நேற்றையதினம் போராட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் அவர்களைப் பிணையில் விடுவித்தார்.

---

## துணைத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிமித்தமான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார். இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசில்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

## இன்று நள்ளிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணைந்து கொள்ளவுள்ளன. இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக நாடு முழுவதும் ரயில்கள் இயங்காது என ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்தார்.

---

## கல்வியங்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அண்மையாக உள்ள வீடொன்றின் முன்பாக நேற்று(புதன்கிழமை) இரவு 6.40 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

47 வயதுடைய இருவரே தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளனர். 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேரே இந்தத் தாக்குதலை நடத்தினர் என ஆரம்ப விசாரணைகளின் பின்னர் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் முன்பாக இருவர் மோட்டார் சைக்கிள்களில் நின்று கதைத்துக் கொண்டிருந்த போது அங்கு 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த மூவர் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டமையுடன் மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கல்வியங்காடு செங்குந்தா மைதானம் தொடர்பான பிணக்கே இந்தத் தாக்குதலின் பின்னணியாக இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்றமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் சில மணித்தியாலங்களின் பின்பே சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வருகை தந்தனர் எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

---

## அலரி மாளிகைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தன்னெழுச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் 'கோட்டா கோ கோம்' போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ வதிவிடமாகிய அலரி மாளிகைக்கு முன்பாக தற்காலிக கூடாரங்களை அமைத்து 'மைனா கோ கம' என்ற பெயரில் போராட்டம் ஒன்று கடந்த பல நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இங்கு அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கூடாரங்களில் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு இடையூறுகள் ஏற்படுவதாகத் தெரிவித்து கொள்ளுப்பிட்டிப் பொலிஸாரினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த மே மாதம் 2ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் ஆர்ப்பாட்டக்காரர்களையும் தற்காலிகக் கூடாரங்களையும் அகற்றுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. எனினும் நீதிமன்ற உத்தரவு பொலிஸாரினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மீண்டும் இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தபோது நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் நீதிவான் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய அங்கு அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கூடாரங்கள் மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டமையுடன் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பெரும் வாக்குவாதங்களின் பின்னர் இந்தப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

---

## கோட்டாபயவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நேற்று நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

# அம்புலன்ஸ் சேவை முன்னெடுக்க அரசு நிதிகளை ஒதுக்கவேண்டும்

## கலாநிதி ஹர்ஷ டி சில்வா கோரிக்கை

1990 சுவா செரிய, இலவச நோயாளர் அம்புலன்ஸ் சேவையின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நிதியை ஒதுக்குமாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே ஹர்ஷ டி சில்வா அவசர அம்புலன்ஸ் சேவையை நடத்துவதற்கு தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்குமாறு வலியுறுத்தி தனிப்பட்ட முறையீடு ஒன்றை விடுத்துள்ளார்.

1990 சுவா செரிய நோயாளர் அம்புலன்ஸ் சேவை இலங்கையில் செயற்படுவதற்கு நிதி இல்லாமல் போனதாக அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

1990 சுவா செரிய அறக்கட்டளை 2018 இல் நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இந்த இலவச அம்புலன்ஸ் சேவை இலங்கையில் 5 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதிக்கு எதிரானதும் மற்றும் பிரதமர் தலைமையிலான அரசுக்கு எதிரானதுமான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் உடனடியாக வாக்கெடுப்புக்கு வரவேண்டும்.

புதிய பிரதி சபாநாயகரை உடனடியாக நியமிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நியாயமான வரிக் கொள்கை பற்றி எனக்கூறும்போது கைதட்டுபவர்கள், இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் கொண்டுவந்த கோடீஸ்வரர்களுக்கு வரிச்சலுகை வழங்கும் அறிவிப்பின் போதும் கைதட்டினார்கள்.

கோடிக்கணக்கான டொலரை நாட்டுக்கு இழக்கச் செய்த பண்டோரா திருடர்களிடமிருந்து உடனடியாகப் பணத்தை மீட்குமாறுக் கோரிக்கை விடுக்கின்றோம்.

நலன்புரித் திட்டங்களை அரசு கொள்ளையடிக்கக்கூடாது. சர்வதேச நன்கொடை மாநாடொன்றை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கியது தவறு என அரசு கூறுவதைக் கண்டிக்கின்றோம். சம்பள உயர்வால் அரசுக்கு வருமானம் இழக்காது.

அரசின் 30 மாத கால தாமதச் செயற்பாடுகளாலேயே நாடு இன்று வீழ்ச்சியடைந்துள்ளது. இன்றாவது உலக நாடுகளுடன் கொடுக்கல் – வாங்கல்களை முன்னெடுக்குமாறு அரசைக் கோருகின்றோம்.

பிரச்சினை நீடித்தால் லெபனானுக்கு ஏற்பட்ட நிலைமையே இலங்கைக்கு ஏற்படும் என நிதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். 'ஏற்படும்' என்பது அல்ல, அந்நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்கு அரசுதான் பொறுப்புக்கூற வேண்டும். தலைக்கு மேல் வெள்ளம் வந்த பிறகு, அணை கட்டுவது குறித்து சிந்திப்பதில் பயன் இல்லை.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும்; பிரதமர் வீடு செல்ல வேண்டும். மக்களின் கோரிக்கை இதுவே. அதற்காகவே நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை முன்வைத்துள்ளோம் – என்றார்.

---

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

கொழும்பு – காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கவின் சிலைக்கு முன்னால் ஒன்றுகூடிய இளம், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பேரணியாக ஜனாதிபதி செயலகம் வரை சென்றனர்.

அவர்கள், ஜனாதிபதி செயலகம் முன் நீதி வேண்டிக் கோஷங்களை எழுப்பிக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் மதகுருமார்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சட்டம் இருக்க வேண்டிய இடம் பற்றி கூறும் பேராயர்

நாட்டின் சட்டம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கையாள முடியும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளமை வருத்தத்துக்குரியது என கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சட்டம் இவர்கள் இருவருக்கும் உச்சத்தில் இருக்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பேராயர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனைத் தெரி வித்துள்ளார். நாட்டின் தலைவர்கள் நீதியை நிலை நாட்ட வேண்டும் என புனித பாப்பரசர் தெளிவாகக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதனால், நாட்டின் பொறுப்புக் கூற வேண்டிய தலைவர்கள் நாட்டைப் பற்றிச் சிந்தித்து பணியாற்ற பழக்கிக்கொள்ள வேண்டும். இதற்கு பதிலாக நாடகங்களை நடிப்பதில் பயனில்லை.

சரியான முறையில் கடமையை நிறைவேற்ற வேண்டும். அதேபோல் இனங்கள், மதங்களுக்கு இடையில் பகை புணர்வை ஏற்படுத்துவதை புறந்தள்ளி விட்டு, ஒரு நாடு என்ற வகையில் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் எனவும் பேராயர் கூறியுள்ளார்.

புனித பாப்பரசர் பிரான்ஸிஸின் சிறப்பு அழைப்புக்கு இணங்க வத்திகான் சென்றிருந்த பேராயர், நாடு திரும்பிய போது விமான நிலையத்தில் வைத்து இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். புனித பாப்பரசரிடம் தமது துன்ப துயரங்களை முன்வைத்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

---

## வரி உயர்வுகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய வரவு – செலவு திட்டம் ஊடாக வருமான வரியை அதிகரிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையை இலங்கை உடனடியாக முகாமைத்துவப்படுத்த வேண்டும் எனவும், நாடு பேரழிவின் விளிம்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தலில் இருந்து விடுபட அனைவருக்கும் தேசிய பொறுப்பு உள்ளது எனத் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள வரிக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பது கேள்விக்குறி எனவும் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஓரிரு வருடங்களில் தீர்க்க முடியுமா என்று தெரியவில்லை. கடந்த காலங்களில் வரிகள் அதிகரிக்கப்பட வேண்டிய காலப்பகுதியில் அரசாங்கம் வரிகளை குறைத்ததாகவும் அதன் பலனை இன்று அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையின் சரிவு, எண்ணெய் விலை உயர்வு, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை உரிய காலத்தில் நாடாதமை உள்ளிட்ட பல காரணிகள் வெளிநாட்டு கையிருப்பு இழப்புக்கு பங்களித்ததாகவும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் பிரச்சினையை ஒரு மாதத்தில் தீர்க்க முடியும் என கூறினால் நான் பைத்தியகாரன் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க சுமார் 2 வருடங்களுக்கும் அதிகமாகச் செல்லும். 2 வருடங்களில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதா அல்லது 5 முதல் 10 வருடங்கள் வரை இதனை நீடிப்பதா என்பதும் நம் அனைவரினதும் கைகளில்தான் உள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.